Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 13 |
| | | Defence |
| | | Court |
| Name | : | இளங்கோ |
| Father / Husband Name | : | ஆறுமுகம் |
| Village | : | அருப்புக்கோட்டை |
| Taluk | : | அருப்புக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | அரசியல் கட்சி நிர்வாகி |
| Religion | : | |
| Age | : | 78 |

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 27.11.2025.

**வழக்கு விசாரணையின் போது இலவச வழக்கறிஞர் திரு.K.ஜோதிமணி, பதிவு எண் M.S.No.1511/2017 நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்தார்.**

**எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திரு.K.ஜோதிமணி, அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினராகவும், மாவட்ட நிர்வாக குழுவிலும் செயல்பட்டு மக்கள் பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன கனகவள்ளி அம்மாளின் கணவர் பாலசுப்பிரமணியம் எங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராவார். அவரை எனக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக தெரியும். கடந்த 01.02.2019 அன்று காலை சுமார் 6.00 மணியளவில் மேற்சொன்ன பாலசுப்பிரமணியம் எனக்கு போன் செய்து அவர் மனைவியை யாரோ கொலை செய்து விட்டதாகவும், அவர் ஊர் திரும்பிக் கொண்டிருப்பதாகவும், என்னை அவர் வீட்டிற்கு வருமாறும் கூறினார். 2. அதன் பேரில் நான் காலை சுமார் 7.00 – 8.00 மணிக்குள் விருதுநகர் செல்லும் பிரதான சாலையில் ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகே அமைந்துள்ள பாலசுப்பிரமணியம் வீட்டிற்கு சென்ற போது போலீசார் அங்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள்.

2. அதற்கு முந்தைய நாள் அதாவது 31.01.2019 அன்று நகைக்காக கனகவள்ளி அம்மாளை யாரோ கொலை செய்து விட்டதாக அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். அதன் பிறகு சுமார் 2–3 நாட்களில் பத்திரிக்கையில் வந்த செய்தியை பார்த்து கனகவள்ளி அம்மாளை ராஜா, பாண்டியராஜன் மற்றும் கணேசன் ஆகியோர் கொலை செய்து விட்டதாக அறிந்துக் கொண்டேன். மேலும் சம்பவ தினமான 31.01.2019 அன்று பாவடித்தோப்பு முக்கு அருகே அமைந்துள்ள

டீக்கடையில் பாண்டியராஜன் மற்றும் கணேசன் ஆகியோர் இருந்தார்கள். நான் விருதுநகரில் உள்ள மாவட்ட கட்சி அலுவலகத்திற்கு செல்வதற்காக காலை சுமார் 7.00 மணியளவில் பேருந்திற்காக பாவடித்தோப்பு நிறுத்தத்தில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் பாண்டியராஜன் மற்றும் கணேசன் ஆகியோர் பாவடித்தோப்பு முக்கு அருகே அமைந்துள்ள டீக்கடை அருகே நின்றுக்கொண்டிருந்தார்கள். மாலையில் அருப்புக்கோட்டை திரும்பி போது மாலை சுமார் 6.30 – 7.00 மணியளவில் அதே டீக்கடை அருகில் ஆஜர் எதிரிகள் பாண்டியராஜன் மற்றும் கணேசன் ஆகியோர் பாவடித்தோப்பு முக்கு அருகே அமைந்துள்ள அதே டீக்கடை அருகே நின்றுக்கொண்டிருந்தார்கள். எதிரிகள் இருவரையும் எனக்கு ஏற்கனவே தெரியும்.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(எதிரியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்)**

பாலசுப்பிரமணியம் எனக்கு 01.02.2019 அன்று காலை சுமார் 6.00 மணியளவில் போன் செய்து அவர் விருதுநகரை நோக்கி ரயிலில் வந்துக்கொண்டிருப்பதாக கூறினார். போலீசார் சம்பவ இடத்தில் 01.02.2019 அன்று காலை விசாரித்துக்கொண்டிருந்தபோது நான் அங்கு இருந்தேன். நான் இறுதிச் சடங்கில் பங்கேற்கவில்லை என்று சொல்வது தவறு. நான் இடுகாட்டுக்கு செல்லவில்லை. வயது மூப்பின் காரணமாக நெடுந்தொலைவு நடக்கமுடியாத காரணத்தினால் பாவடித்தோப்பு முக்கு வரை சென்றுவிட்டு திரும்பி விட்டேன். பாலசுப்பிரமணியத்தின் உறவினராக பாலகிருஷ்ணன் இறுதிச்சடங்கில் கலந்துக்கொண்டார். பாலகிருஷ்ணனின் மனைவி சுமதி இறுதிச்சடங்கில் கலந்துக்கொண்டாரா

என்றால் பாலசுப்பிரமணியத்தின் உறவினர்கள் கலந்துக்கொண்டார்கள். உறவினர்களின் பெயர் எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார்.

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(எதிரியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்)**

2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளுமாறு 3 வது எதிரி கூறினார்.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 14 |
| | | Defence |
| | | Court |
| Name | : | நாகரத்தினம் |
| Father / Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | அருப்புக்கோட்டை |
| Taluk | : | அருப்புக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | நெசவு |
| Religion | : | |
| Age | : | 58 |

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 27.11.2025.

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டையில் புளியம்பட்டி பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் நெசவு வேலை செய்து வருகிறேன். விருதுநகர் ரோட்டில் உள்ள ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகே இவ்வழக்கில் இறந்துபோன கனகவள்ளி அம்மாளின் வீடு உள்ளது. கடந்த 31.01.2019 அன்று நான் காலை 9.30 மணிக்கு கனகவள்ளி அம்மாளின் வீட்டிற்கு எதிர்த்தாற்போல் அமைந்துள்ள மாரிமுத்து என்பவர் நடத்தி வரும் இட்லிக்கடைக்கு இட்லி வாங்க சென்றிருந்தேன். அச்சமயம் ராஜா என்பவரும் பாண்டியராஜனும் கனகவள்ளி அம்மாளின் வீட்டிற்குள் சென்றதை நான் பார்த்தேன். இன்று நீதிமன்றத்தில் பாண்டியராஜன் ஆஜராகியுள்ளார். ராஜா இறந்துவிட்டதாக கூறினார்கள். கனகவள்ளி அம்மாளை நகைக்காக ராஜா மற்றும் பாண்டியராஜன் ஆகியோர் கொலை செய்து விட்டதாக மறுநாள் கேள்விப்பட்டேன்.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(எதிரியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்)**

2. 31.01.2019 அன்று காலை 9.30 மணிக்கு நீங்களும் (2ம் எதிரி பாண்டியராஜன்) மற்றும் ராஜா ஆகியோர் கனகவள்ளி அம்மாளின் வீட்டிற்குள் செல்வதை நான் பார்த்தேன். நீங்கள் (2ம் எதிரி பாண்டியராஜன்) ஏற்கனவே கனகவள்ளி அம்மாளுக்கு பழக்கமான நபர் என்பதால் அவர் வீட்டிற்கு சென்றதை நான் பார்த்தேன். இறந்துபோன கனகவள்ளி அம்மாள் வீட்டிற்கு ராஜா ஏற்கனவே சென்றிருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. நான் (2ம் எதிரி பாண்டியராஜன்) மற்றும் ராஜா உள்ளே சென்றவுடன் கதவை பூட்டிவிட்டோமா அல்லது கதவு திறந்த நிலையில் இருந்ததா என்றால் உள்ளே சென்றதை கவனித்தேன். அதன்

பிறகு நான் இட்லியை வாங்கிக்கொண்டு என் வீட்டிற்கு திரும்பி விட்டேன்.

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**இல்லை.**

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 15 |
| | | Defence |
| | | Court |
| Name | : | பிரகாஷ் |
| Father / Husband Name | : | சங்கரநாராயணன் |
| Village | : | பாலையம்பட்டி |
| Taluk | : | அருப்புக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | Site Supervisor |
| Religion | : | |
| Age | : | 40 |

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 27.11.2025.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது அருப்புக்கோட்டையில் பாலையம்பட்டி பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட கலையில் தொழிற்கல்வி படித்துள்ளேன். விருதுநகரில் உள்ள தனியார் கட்டுமான நிறுவனத்தில் கள மேற்பார்வையாளராக (Site Supervisor) வேலை செய்து வருகிறேன். கடந்த ஜனவரி 2019 ம் ஆண்டு நான் பாலையம்பட்டியில் உள்ள போஸ்டல் காலணி பகுதியில் வசித்து வந்தேன். கடந்த 31.01.2019 அன்று நெசவு வேலை செய்து வந்தேன். அன்றைய தினம் இரவு சுமார் 11.00 – 11.30 மணியளவில் என் அப்பாவின் உடன்பிறந்த அண்ணன் மகனான பாலகிருஷ்ணன் என்பவர் எனக்கு போன் செய்து என் பெரியம்மா கனகவள்ளி அம்மாள் அவர்கள் ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகே உள்ள சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அவர் வசித்து வந்த வீட்டில் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதாக கூறினார்.

2. நான் கனகவள்ளி அம்மாளின் வீட்டிற்கு சுமார் 11.45 – 12.00 மணிக்குள் சென்று விட்டேன். நான் கனகவள்ளி அம்மாளின் வீட்டிற்கு சென்ற போது என் உறவுக்காரர்களான சகோதரர்கள் பாலகிருஷ்ணன், அருணகிரி, பாலகிருஷ்ணனின் மனைவியான சுமதி, அருணகிரியின் தாய்மாமாவான கணேசன், ஆஜர் எதிரிகள் பாண்டியராஜன் மற்றும் கணேசன் ஆகியோர் இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் பாண்டியராஜன் மற்றும் கணேசன் ஆகிய இருவரும் முதலில் கனவள்ளி அம்மாள் சடலத்தின் மீதும், வீட்டில் இருந்த ரத்தத்தையும் கழுவி விட சொன்னார்கள். அதன் பேரில் கனகவள்ளி அம்மாளி உடலை தூக்கி தண்ணீர் ஊற்றி கழுவும் போது அவரின் கழுத்துப் பகுதியில் வெட்டுக்காயம் காணப்பட்டது. ஆகையால் அவர் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டு பாலகிருஷ்ணன் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

3. போலீசாரும் சிறிது நேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு குறிப்புகள் எடுத்துக்கொண்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். வரைபடம் தயாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அதனை நான் சம்பவ இடத்தில் வைத்து நள்ளிரவுக்கு பின், அதிகாலை முன்னர் கையெழுத்து போட்டேன். போலீசார் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த சிமெண்ட் தரையிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட சிமெண்ட் தரை துண்டுகள், சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படாத சிமெண்ட் தரையிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட சிமெண்ட் தரை துண்டுகள், சம்பவ இடத்தில் இரத்தத்துடன் கூடிய உடைந்த கண்ணாடி வளையல் சிறிது, சம்பவ இடத்திலிருந்து சிறிதளவு முடி ஆகியவற்றை ஒரு அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும், அருணகிரியின் தாய்மாமாவான கணேசனும் கையொப்பம் செய்தோம். போலீசார் தயாரித்த பார்வை மகஜரில் என்னுடன் அருணகிரியின் தாய்மாமாவான கணேசனும் கையொப்பம் செய்தார். **என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த சிமெண்ட் தரையிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட சிமெண்ட் தரை துண்டுகள் சா.பொ.6 ஆகவும், சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படாத சிமெண்ட் தரையிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட சிமெண்ட் தரை துண்டுகள் சா.பொ.7 ஆகவும், சம்பவ இடத்தில் இரத்தத்துடன் கூடிய உடைந்த கண்ணாடி வளையல் சிறிது சா.பொ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு என் பெரியம்மாவை நகைக்காக கணேசன் மற்றும் பாண்டியராஜன் ஆகியோர் கொலை

செய்துவிட்டதாக அறிந்துக்கொண்டேன். என் பெரியம்மாவின் இரண்டு காது கம்மல்கள் –2 ஜோடி, மாட்டல் – 1 ஜோடி, மூக்குத்தி –2 எண்ணிக்கை மற்றும் கழுத்து செயின் ஆகியவற்றை அவரிடமிருந்து பறித்து செல்வதற்காக அவரை கொலை செய்து விட்டதாக அறிந்துக் கொண்டேன். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(எதிரியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்)**

4. சம்பவம் பற்றி எனக்கு இரவு 11.30 மணிக்கு பாலகிருஷ்ணன் போனில் தகவல் கூறினார். சம்பவ இடத்தில் அருணகிரி, பாலகிருஷ்ணன், அவர் மனைவி சுமதி, நீங்கள் (2ம் எதிரி பாண்டியராஜன்), கணேசன் (3ம் எதிரி), அருணகிரியின் தாய்மாமாவான கணேசன், அருணகிரியின் தாய்மாமாவான கணேசனின் தகப்பனரார் சோமசுந்தரம் ஆகியோர் இருந்தார்கள். இறந்த கனகவள்ளியின் தகப்பனார் சம்பவ இடத்தில் இல்லை. காவல்துறையினருக்கு பாலகிருஷ்ணன் போனில் தகவல் சொன்னார். சடலத்தை நீங்கள் (2ம் எதிரி பாண்டியராஜன் மற்றும் 3ம் எதிரி கணேசன்) இருவரும், பாலகிருஷ்ணன், அவர் மனைவி சுமதி ஆகியோர் சேர்ந்து அலசினீர்கள். அருணகிரியின் மனைவி அச்சமயம் அங்கில்லை. முத்துமாரி என்ற பெண்மணி அச்சமயம் இல்லை.

5. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து வரைபடம் மற்றும் மகஜர் தயார் செய்து அதில் நானும் சாட்சி கணேசனும் கையொப்பம் செய்த பின்னர் காவல்நிலையத்திற்கு நான் அதிகாலையில் சென்றேன். காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக அச்சமயம் அருணகிரி, பாலகிருஷ்ணன், நீங்கள் (2ம் எதிரி பாண்டியராஜன்), 3ம் எதிரி கணேசன் மற்றும் என்னை போலீசார் அழைத்து சென்றார்கள். மேற்சொன்ன 5

நபர்களை தவிர அச்சமயம் காவல்நிலையத்தில் இவ்வழக்கு தொடர்பாக வேறு யாரும் இல்லை. அதன் பிறகு சுமார் 2 மணிநேரம் கழித்து காவல்நிலையத்திற்கு அருணகிரியின் மனைவி கற்பகம், பாலகிருஷ்ணனின் மனைவி சுமதி மற்றும் முத்துமாரியை போலீசார் விசாரணைக்காக அழைத்து வந்தார்கள். அருணகிரி இறுதி சடங்கு செய்வதற்காக போலீசார் காவல்நிலையத்திலிருந்து வெளியே செல்ல அனுமதி கேட்டதன் பேரில் போலீசார் அருணகிரியை 01.02.2019 அன்று காலை 7.00–8.00 மணிக்குள் காவல்நிலையத்திலிருந்து அனுப்பினார்கள். என்னையும் பாலகிருஷ்ணனையும் 02.02.2019 அன்று விடியற்காலை 6.00–7.00 மணிக்குள் காவல்நிலையத்திலிருந்து வெளியே விட்டார்கள். எங்களுடன் பாலகிருஷ்ணனின் மனைவி சுமதி மற்றும் முத்துமாரியும் காவல்நிலையத்திலிருந்து வெளியே வந்தார்கள். 01.02.2019 இரவு காவல்நிலையத்தில் கடவுள் மகன் ஆறுமுகம், பன்னீர்செல்வம் ஆகியோரை போலீசார் விசாரித்தார்களா என்றால் இரவு நேரத்தில் விசாரிக்கவில்லை. மதியம் அல்லது மாலை வேளையில் மேற்சொன்ன நபர்களை விசாரித்தார்கள் என்று சாட்சி கூறுகிறார்.

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளுமாறு 3 வது எதிரி கூறினார்.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.